# சட்டவரைஞர் திணைக்களம்

**2015**

**செயல்நிறைவேற்றுகை அறிக்கை**

## நோக்கு

அரசாங்கத்தின் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுவதற்கு அரசாங்கத்திற்குத் துணைபுரிவதன் மூலம் நல்லாட்சியை உறுதிப்படுத்துதல்.

## பணி

அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுவதில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அத்தகைய சட்டவாக்கத்தின் வரைதல் அரசியலமைப்பிற்கிணங்கச் செய்யப்படுதல்.

## அறிமுகம்

சட்டவரைஞர் திணைக்களம், "A" தரத்திலான அரசாங்கத் திணைக்களமொன்றாகவுள்ளது. அதியுத்தமராம் சனாதிபதி அவர்களின் நேரடி மேற்பார்வையின்கீழ் பணியாற்றிய இத்திணைக்களம், 2015.08.01 ஆந்தேதிய 1897/15ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின்படியும் 2015.09.29 ஆந்தேதிய 1933/3ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின்படியும் நீதி மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரின் நேரடி மேற்பார்வையின்கீழ் வந்தது; இத்திணைக்களம் இப்பொழுது நீதியமைச்சின் நேரடி மேற்பார்வையின்கீழ் பணியாற்றுகின்றது.

சட்டவரைஞர் திணைக்களத்தின் முக்கிய பணி, அரசியலமைப்புக்கிசையவும் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட முடிபுகளுக்கு இணங்கவும் பல்வேறு விடயங்கள் பற்றிய அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கங்களாக உருமாற்றுதலாகும். இந்நடைமுறையில் இத்திணைக்களமானது, புதிய சட்டவாக்கங்களை ஆக்குவதற்கும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் சட்டமூலங்களை வரைகின்றதுடன், பல்வேறு அரசாங்க அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களையும் மீளாய்வுசெய்கின்றது. இத்திணைக்களத்துக்குப் பொறுப்பிக்கப்பட்ட ஏனைய கடமைகள், வரைவுச் சட்டமூலங்களைப் பரிசீலனை செய்வதற்குக் கூட்டப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றுவதனையும் சட்டமூலங்கள் விவாதத்துக்கு எடுக்கப்படும்போது பாராளுமன்றத்தில் சமூகமாயிருப்பதனையும் பாராளுமன்றத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுவதனையும் உள்ளடக்கும். அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்டமுறையான குழுக்களும் உட்பட, இத்திணைக்களம் எல்லா அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சேவைகளை வழங்குகின்றது. பல்வேறு சட்டமூலங்களையும் துணைநிலைச் சட்டவாக்கங்களையும் தயாரித்தல் தொடர்பாக இத்திணைக்களமானது அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சட்ட மதியுரையையும் வழங்குகின்றது.

### 1. சட்டவாக்கங்களை வரைதல் தொடர்பாகச் சட்டவரைஞர் திணைக்களத்தின் பணிகள்:

(1) புதிய சட்டவாக்கங்களை மும்மொழிகளிலும் ஆக்குவதற்கும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் என சட்டமூலங்களை வரைதல்.

(2) துணைநிலைச் சட்டவாக்கங்களை மீளாய்தலும் மற்றும் (அவசியமானவிடத்து), அவற்றை மும்மொழிகளிலும் வரைதலும்.

(3) சட்டவாக்கங்களை வரைதலுடன் சம்பந்தப்பட்ட பாராளுமன்றக் கடமைகளைப் புரிதல்.

(4) மாகாண சபை நியதிச்சட்டங்களை வரைதல்.

(5) தனிப்பட்ட உறுப்பினர் சட்டமூலங்களை (கூட்டிணைத்தல்களின் வரைவுச் சட்டமூலங்கள்) மும்மொழிகளிலும் மீளாய்தல்.

சட்டங்களையும், துணைநிலைச் சட்டவாக்கங்களையும், மாகாணசபை நியதிச்சட்டங்களையும் வரைதல் தொடர்பில் இத்திணைக்களம் சட்ட மதியுரையையும் வழங்குகின்றது.

இத்திணைக்களத்தின் தனித்துவமான சிறப்புக்கூறு என்னவெனில், இத்திணைக்களம் அதன் சொந்தக் கட்டமைக்கப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டத்தைக் கொண்டிருப்பதில்லை என்பதாகும். இதற்கான காரணம், திணைக்களத்தின் வேலை நிகழ்ச்சித்திட்டம், தேவைப்பட்ட கொள்கை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதன் மேல், கொடுக்கப்பட்டவொரு நேரத்தில், அரசாங்க அமைச்சுக்களினதும், அத்தகைய அமைச்சுக்களின் கீழுள்ள பல்வேறு திணைக்களங்களினதும் சட்டமாக்கல் தேவைகளின் மீது அவசியமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளமையாகும். ஆதலால், சட்டவரைஞர் திணைக்களத்தின் செயல்நிறைவேற்றுகைப் பதிவு, ஏதேனும் குறிப்பிட்ட ஆண்டுபூராகவும் முறையான துறைசார் அமைச்சுக்களினால் அதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முதனிலை மற்றும் திருத்தச் சட்டவாக்கங்களுக்காக அத்துடன் துணைநிலைச் சட்டவாக்கங்களுக்காகச் செய்யப்பட்ட வேண்டுகோள்களை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வதன் அடிப்படையின் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது. இத்திணைக்களத்தின் பிரதான பணியாகவுள்ள சட்டவாக்கங்களை வரைதலின் நோக்கெல்லையினுள் அடங்குகின்ற ஏதேனும் வடிவத்திலான சட்டவாக்கம் வேண்டுகோள் விடுக்கும் அமைச்சுக்கு அல்லது திணைக்களத்துக்கு அது அனுப்பப்படுவதற்கு முன்னர் மும்மொழிகளிலும் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

## 2. பணியாட்டொகுதியினர்

சட்டவரைஞர் திணைக்களத்தின் பணியாட்டொகுதியினர் அமைப்பு கீழே காட்டப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஊழியர்கோப்பு 151 ஆகும்; ஆயினும், 2015ஆம் ஆண்டில் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஊழியர்கோப்பு 80 ஆகவிருந்தது.

| தொழிலின் வகுதி | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பு | தொழிலில் இருந்த ஊழியர் கோப்பு |
|---|---|---|
| சிரேட்ட மட்டம் | 37 | 25 |
| மூன்றாம்நிலை மட்டம் | 28 | 03 |
| இரண்டாம்நிலை மட்டம் | 62 | 29 |
| முதனிலை மட்டம் | 24 | 23 |

**2015.12.31 அன்றுள்ளவாறு சட்டவரைஞர் திணைக்களத்தின் ஊழியர் கோப்பு**

| சிரேட்ட மட்டம் | | | மூன்றாம்நிலை மட்டம் | | | இரண்டாம்நிலை மட்டம் | | | முதனிலை மட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக் கப்பட்டது | உள்ளபடி யானது | | அங்கீகரிக் கப்பட்டது | உள்ளபடி யானது | | அங்கீகரிக் கப்பட்டது | உள்ளபடி யானது | | அங்கீகரிக் கப்பட்டது | உள்ளபடி யானது |
| சட்டவரைஞர் | 01 | 01 | நிருவாக அலுவலர் | 01 | - | வரவு செலவுத் திட்ட உதவியாளர் | 01 | 01 | சாரதி | 10 | 09 |
| மேலதிகச் சட்டவரைஞர் | 01 | 01 | பிரதான மொழி பெயர்ப்பாளர் | 02 | 02 | கணக்கு உதவியாளர் | 01 | - | கே.கே .எஸ் (KKS) | 14 | 14 |
| பிரதிச் சட்டவரைஞர் | 05 | 03<br>01<br>(பதிற் கடமை) | மொழி பெயர்ப்பாளர் | 24 | 01 | நூலகப் பொறுப்பாளர் | 01 | 01 | | | |
| சிரேட்ட உதவிச் சட்டவரைஞர் | 08 | 02 | தகவல் மற்றும் தொடர்பு தொழினுட்பவியல் அலுவலர் | 01 | _ | முகாமை உதவியாளர் | 28* | 17 | | | |
| உதவிச் சட்டவரைஞர் | 20 | 15 | | | | ஆவணப் படுத்துகை உதவியாளர் | 20 | 07 | | | |
| பிரதான கணக்காளர் | 01 | 01 | | | | பதிப்பாசிரியர் | 11 | 03 | | | |
| பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | 01 | 01 | | | | | | | | | |
| கூட்டுமொத்தம் | 37 | 25 | | 28 | 03 | | 62 | 29 | | 24 | 23 |
| மொத்தம் | | | | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 151 | | | உள்ளபடியான எண்ணிக்கை 80 | | | | |

* 28 முகாமை உதவியாளர்களைக் கொண்ட ஊழியர் கோப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 20 ஆவணப்படுத்துகை உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்கான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது; எவ்வாறாயினும், 10 ஆவணப்படுத்துகை உதவியாளர்கள் மட்டுமே ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர்.

* 10 அலுவலர்களுளிருந்து 03 வெளியீட்டு உதவியாளர் அலுவலர்கள் பகிரங்க முகாமை நியமனங்களைப் பெற்று இடமாற்றங்களில் சென்றுள்ளனர்.

**<u>இத்திணைக்களத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு எடுக்கப்பட்ட வழிமுறைகள்</u>**

இத்திணைக்களத்தின் முழு வேலைப்பளுவையும் நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கோப்பு 151 ஆகும். எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டில் இத்திணைக்களம், மேற்குறிப்பிடப்பட்ட பணியைப் புரிவதில் அதற்கு உதவுவதற்கு 80 நிரந்தர ஊழியர்களை மட்டுமே கொண்டிருந்தது. கீழே காட்டப்பட்டுள்ளவாறு தொழிலின் பல்வேறு மட்டங்களில் நிரப்பப்படுவதற்கு 71 வெற்றிடங்கள் உள்ளன:-

**சிரேட்ட மட்டம்**

(அ) மிக்க சிரேட்ட பிரதிச் சட்டவரைஞர் மேலதிகச் சட்டவரைஞர் பதவியில் செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர் காலப்போக்கில் அப்பதவிக்கு முறையாக நியமிக்கப்படுவார்.

(ஆ) பிரதிச் சட்டவரைஞர் பதவியில் 02 வெற்றிடங்கள் உள்ளன. ஒரு சிரேட்ட உதவிச் சட்டவரைஞர் ஒரு பதவியில் செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர் காலப்போக்கில் அப்பதவிக்கு முறையாக நியமிக்கப்படுவார். மற்றைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு, சிரேட்ட உதவிச் சட்டவரைஞரொருவர், தற்போதைய பதவியில் அத்தகைய அலுவலர் அவரது பதவிக் காலப்பகுதியைப் பூர்த்திசெய்வதன்மீது தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(இ) சிரேட்ட உதவிச் சட்டவரைஞர் பதவியில் ஆறு (06) வெற்றிடங்கள் உள்ளன. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறைக்கிசைந்தொழுக சொல்லப்பட்ட பதவிக்குத் தகவுடையவராக வருவதற்கு 10 ஆண்டுகாலச் சேவையைப் பூர்த்திசெய்துள்ள உதவிச் சட்டவரைஞர்கள் எவரும் இல்லாதமையினால், சொல்லப்பட்ட வெற்றிடங்களைத் தற்போது நிரப்பமுடியாது.

(ஈ) உதவிச் சட்டவரைஞர் பதவிகளில் 5 வெற்றிடங்கள் உள்ளன. 2015.12.31 அன்றுள்ளவாறு 04 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டு, அவர்களின் ஆட்சேர்ப்புப் பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுமுள்ளது.

**மூன்றாம்நிலை மட்டம்**

(அ) நிருவாக அலுவலர் பதவியில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. இவ்வெற்றிடம் பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாகப் பதிலெதுவும் கிடைக்கவில்லை.

(ஆ) மொழிபெயர்ப்பாளர்கள் பதவியில் 23 வெற்றிடங்கள் உள்ளன. அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

(இ) தகவல் மற்றும் தொடர்பு தொழினுட்பவியல் அலுவலருக்கான வெற்றிடம் ஒன்று உள்ளது.

**இரண்டாம்நிலை மட்டம்**

(அ) கணக்கு உதவியாளர் பதவியில் வெற்றிடமொன்றுள்ளது. இவ்வெற்றிடம் பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு 2015 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பொருத்தமான அலுவலரொருவர் கிடைக்கக்கூடியவராக வரும்போது இடமாற்றத்தின் மீது அனுப்பப்படுவாரென அறிவிக்கப்பட்டுமுள்ளது.

(ஆ) ஆவணப்படுத்துகை உதவியாளர் பதவியில் 13 வெற்றிடங்களும் பதிப்பாசிரியர் பதவியில் 08 வெற்றிடங்களும் உள்ளன. மேற்படி பதவிகளுக்கான அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்குக் கடைசியாக நடாத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகளினது அடிப்படையின்மீது அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளதுடன், நியமிக்கின்ற அதிகாரிகளைக் கலந்தாலோசித்ததன்மேல் நடபடிகளை எடுக்கும்படி திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுமுள்ளது.

**முதனிலை மட்டம்**

சாரதிப் பதவியில் ஒரு வெற்றிடமுள்ளது. இவ்வெற்றிடம் பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 3. இத்திணைக்களத்தின் பிரிவுகள்

இத்திணைக்களமானது அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பணிகளைப் புரிவதற்குப் பின்வரும் பிரிவுகளைக் கொண்டிருக்கின்றது.

சட்ட வரைதற் பிரிவு.

தாபன மற்றும் நிருவாகப் பிரிவு.

மொழிபெயர்ப்புப் பிரிவு.

வெளியீட்டுப் பிரிவு.

கணக்குப் பிரிவு.

## சட்டவரைதற் பிரிவு

இப்பிரிவின் முக்கிய பணிகள் பின்வருமாறாகும்:-

- அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கங்களாக உருமாற்றுதல்.
- புதிய சட்டவாக்கங்களை ஆக்குவதற்கும் மற்றும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் எனச் சட்டமூலங்களை மும்மொழிகளிலும் வரைதல்.
- சட்டமூலங்கள் தொடர்பாக அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சட்ட மதியுரை வழங்குதல்.
- சட்டமூலங்களை வரைதலுடனும் சட்டவாக்கங்களை நிறைவேற்றுதலுடன் சம்பந்தப்பட்ட பாராளுமன்றக் கடமைகளைப் புரிதல்.
- மாகாணசபைகளுக்கான நியதிச்சட்டங்களை வரைதல்.

**<u>2015 ஆம் ஆண்டு தொடர்பான வரைவுச் சட்டமூலங்கள் பற்றிய விபரங்கள்</u>**

| | வரைதல் (ஆண்டின் தொடக்கத்தில்) | ஆண்டின் போது திறத்தவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் | ஏலவேயுள்ள சட்டங்களுக்கான புதிய விண்ணப்பங்கள் | மொத்தம் | தயாரிக்கப்பட்டு இயைபான திறத்தவர்களுக்குக் கையளிக்கப்பட்ட சட்டமூலங்களின் எண்ணிக்கை | மூடிவிடப்பட்ட கோப்புகள் | இணைந்த கோப்புகள் | எக்கோரிக்கைகள் தொடர்பில் வேலை இறுதியாக்கப் படாதுள்ளதோ அக்கோரிக்கைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| புதிய சட்டமூலங்களையும் மற்றும் திருத்தச் சட்டவாக்கங்களையும் வரைதல் | 162 | 59 | 5 | 226 | 32 | - | - | 194 |
| பாராளுமன்ற உறுப்பினர்களின் தனியார் உறுப்பினர்களின் சட்டமூலங்கள் | 82 | 10 | 2 | 94 | 5 | - | - | 89 |
| மாகாணசபை நியதிச்சட்டங்கள் | 19 | 4 | - | 23 | - | - | - | 23 |
| துணைநிலைச் சட்டவாக்கங்கள் (கட்டளைகள், விதிகள், ஒழுங்குவிதிகள் முதலியன) | 124 | 16 | 113 | 253 | 129 | - | - | 124 |

**2015 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டமூலங்கள்**

| தொடர் இல. | திணைக்களக் கோப்பில. | சட்டத்தின் இலக்கம் | சட்டத்தின் பெயர் |
|---|---|---|---|
| 01 | சவஓ 50/2015 | 01/2015 | ஒதுக்கீடு (திருத்தம்) |
| 02 | சவஓ 46/2015 | 02/2015 | கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தம்) |
| 03 | சவஓ 8/2015 | 03/2015 | புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபை (திருத்தம்) |
| 04 | சவஓ 46/2007 | 04/2015 | குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம் |
| 05 | சவஓ 21/2012 | 05/2015 | தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை |
| 06 | சவஓ (கூட்) 50/2012 | 06/2015 | மடஹபொல ஸ்ரீ ரத்னபாலராம விகாரையின் பௌத்த கல்வி அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்) |
| 07 | சவஓ 20/2015 | - | அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தம் |
| 08 | சவஓ 25/2013 | 07/2015 | குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தம்) |
| 09 | சவஓ 39/2009 | 08/2015 | தேசிய ஆசிரியர் கல்வி அதிகாரசபை (நீக்கல்) சட்டம் |
| 10 | சவஓ 11/2015 | 09/2015 | உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் |
| 11 | சவஓ 10/2015 | 10/2015 | நிதிச்சட்டம் |
| 12 | சவஓ 16/2015 | 11/2015 | சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் |
| 13 | சவஓ 14/2015 | 12/2015 | நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டம் |
| 14 | சவஓ 13/2015 | 13/2015 | பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் |
| 15 | சவஓ 12/2015 | 14/2015 | பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டம் |
| 16 | சவஓ 42/2015 | 15/2015 | ஒதுக்கீடு (திருத்தம்) |
| 17 | சவஓ 38/2015 | 16/2015 | ஒதுக்கீடு |

குறிப்பு:

- ‘‘ச.வ.ஓ.’’ என்பது, புதிய சட்டவாக்கங்களுக்கான வரைவுச் சட்டமூலங்களும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களுக்கான திருத்தங்களும் தொடர்பான கோப்புகள் என்று பொருளாகும்;
- ‘‘ச.வ.ஓ. கூட்.’’ என்பது, கூட்டிணைத்தல்களுக்கான வரைவுச் சட்டமூலங்கள் தொடர்பான கோப்புகள் என்று பொருளாகும்.

## தாபன மற்றும் நிருவாகப் பிரிவு

இப்பிரிவு, பணியாட்டொகுதியினரின் ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மற்றும் பயிற்சி, திறமைத் தடைகாண் பரீட்சைகளை நடாத்துதல், ஒழுக்காற்றுக் கருமங்கள் மற்றும் போக்குவரத்துத் தொடர்பான கருமங்கள் அத்துடன் இத்திணைக்களத்திலுள்ள மற்றெல்லா நிறுவனஞ்சார், நிருவாகக் கருமங்கள் என்பவற்றைக் கையாளுகின்றது.

**(1) <u>ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு:</u>**

சட்டவரைஞர் ஓய்வுபெற்றமை காரணமாக, அந்நேரத்தில் மேலதிகச் சட்டவரைஞர் பதவியை வகித்த சட்ட அலுவலா் சட்டவரைஞர் பதவிக்குப் பதவியுயர்த்தப்பட்டார்.

**(2) <u>பயிற்சி:</u>**

**உள்நாட்டுப் பயிற்சி.**

அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட உள்நாட்டுப் பயிற்சி பின்வருமாறாகும்:

i. <u>இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்</u>

| | |
|---|---|
| சட்ட அலுவலர்கள் | - 01 |
| உதவிப் பணிப்பாளர் | - 01 |
| மொழிபெயர்ப்பாளர் | - 01 |
| முகாமை உதவியாளர்கள் சேவை | - 01 |

ii. <u>தேர்ச்சிகள் அபிவிருத்தி மன்றம்</u>

| | |
|---|---|
| சட்ட அலுவலர்கள் | - 05 |
| நூலகர் | - 01 |
| முகாமை உதவியாளர்கள் சேவை | - 10 |
| ஆவணப்படுத்துகை உதவியாளர் | - 01 |
| கே. கே. எஸ். (K.K.S.) | - 02 |

iii. <u>தேசியத் தொழிற்கல்வி நிறுவகம்</u>

| | |
|---|---|
| ஆவணப்படுத்துகை உதவியாளர் | - 02 |
| கே. கே. எஸ். (K.K.S.) | - 01 |

iv. <u>பிராக் சேர்விஸ் பிறைவேட் லிமிற்றெற்</u>

| | |
|---|---|
| முகாமை உதவியாளர்கள் சேவை | - 01 |

v. <u>கொழும்புப் பல்கலைக்கழகம்</u>

ஆவணப்படுத்துகை உதவியாளர் - 01

vi. <u>தேசிய நூலகர் மற்றும் வெளியீட்டுச் சேவைச் சபை</u>

நூலகர் - 01

மேற்கூறப்பட்ட பயிற்சிகள் தவிர, இத்திணைக்களத்தின் நூலகர், இலங்கை நூலகர் கழகத்தினால் நடாத்தப்பட்ட இரு செயலமர்வுகளிலும் ஒரு கருத்தரங்கிலும் பங்குபற்றியுள்ளார். களனிப் பல்கலைக்கழகத்தில் அவர் திப்புளோமாவொன்றைக் கற்பதற்கு ஏற்பாடு செய்வதற்கான ஒழுங்கேற்பாடுகள் செய்யப்படுகின்றன.

**வெளிநாட்டுப் பயிற்சி**

i. மேலதிகச் சட்டவரைஞரும், ஒரு பிரதிச் சட்டவரைஞரும் ஓர் உதவிச் சட்டவரைஞரும் கொரியாவில் நடைபெற்ற ஒப்பந்தங்களை வலுவுறுத்துதல் பற்றிய 5 ஆவது சர்வதேச மாநாட்டில் பங்குபற்றினர்.

ii. சிரேட்ட உதவிச் சட்டவரைஞரொருவர், அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற சாட்சி மற்றும் பலிக்குட்படுத்தப்பட்டவரின் பாதுகாப்பு அரங்கில் பங்குபற்றினார்.

iii. பிரதிச் சட்டவரைஞரொருவர், ஐக்கிய இராச்சியத்தில் நடைபெற்ற சட்டவாக்க வரைதற் கற்கைநெறி - 2015 என்பதில் பங்குபற்றினார்.

iv. பிரதிச் சட்டவரைஞரொருவர், ஐ.அ.நாடுகளிலுள்ள சர்வதேசச் சட்டவாக்க வரைதல் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றில் பங்குபற்றினார்.

## சட்டவரைஞர் திணைக்களத்தின் நிறைவேற்று அலுவலர்கள் பங்குபற்றிய வெளிநாட்டு மாநாடுகள் - 2015

| | மாநாட்டின் பெயரும் நாடும் | பங்குபற்றிய அலுவலரின் பெயர் |
|---|---|---|
| 1. | ஒப்பந்தங்களை வலுவுறுத்துதல் பற்றிய 5 ஆவது சர்வதேச மாநாடு – கொரியா | திருமதி டீ.எஸ்.எச்.குமாரஜீவ, மேலதிகச் சட்டவரைஞர்<br><br>திரு.வீ.விமலேஸ்வரன் பிரதிச் சட்டவரைஞர்<br><br>செல்வி ஏ.கே.டீ.ஜீ.ஐ.கே. அபேவிக்ரம உதவிச் சட்டவரைஞர் |
| 2. | சாட்சி மற்றும் பலிக்குட்படுத்தப்பட்டவரின் பாதுகாப்பு அரங்கு – அவுஸ்திரேலியா | திருமதி டீ.டீ.வீரக்கொடி சிரேட்ட உதவிச் சட்டவரைஞர் |

## சட்டவரைஞர் திணைக்களத்தின் நிறைவேற்று அலுவலர்கள் பங்குபற்றிய வெளிநாட்டுப் பயிற்சிநெறிகள் - 2015

| | **பயிற்சிநெறியின் பெயரும் நாடும்** | **பங்குபற்றிய அலுவலரின் பெயர்** |
|---|---|---|
| 1. | சட்டவாக்க வரைதலிலான கற்கைநெறி - 2015 | திருமதி கே.வை.ஆர். ஹப்புஆராச்சி பிரதிச் சட்டவரைஞர் |
| 2. | சர்வதேச சட்டவாக்க வரைதல் நிறுவகம் 2015 – ஐஅநாடுகள் | செல்வி டீ.டீ.குலசேன பிரதிச் சட்டவரைஞர் |

**(3) ஏனைய நிறுவனஞ்சார் மற்றும் நிருவாகச் செயற்பாடுகள்.**

i. உள்நாட்டு ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் சட்டத்துறையில் நடைமுறையிலுள்ள அபிவிருத்திபற்றி அலுவலர்களைப் பரிச்சயமுள்ளவர்களாக வைத்திருக்கும் மற்றும் அது தொடர்பாக அவர்களின் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், இத்திணைக்களம் I ஆம் தர நூலகமொன்றைத் தாபித்துள்ளது. மொத்தத்தில் 66 உள்நாட்டு, வெளிநாட்டுப் புத்தகங்கள் 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

ii. இத்திணைக்கள ஊழியர்களின் நன்மைக்காக திணைக்களத்தில் சேமநலச் சங்கமொன்றுள்ளது. 2015 ஆம் ஆண்டில் சங்கமானது அதன் உறுப்பினர்களுக்குக் கடன்வசதிகள் வழங்கியதுடன், பணியாட்டொகுதியினருக்கிடையே ஒற்றுமையை மேம்படுத்துவதற்கான கலாசார விழாக்களையும் அவர்களின் ஆன்மீக அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட மத நிகழ்ச்சித் திட்டங்களையும் நடாத்தியது. அத்துடன் சமூகசேவைச் செயற்பாடுகளையும் நடாத்தியது (மகரகம புற்றுநோய் ஆசுப்பத்திரியில் சிறுவர்களுக்கு உணவு வழங்குதல்).

iii. சட்ட அலுவலர்களின் சேமநலத்துக்காகச் சட்ட அலுவலர்கள் கழகமொன்று தாபிக்கப்பட்டுள்ளது. அலுவலர்களின் ஏனைய சேமநலத் தேவைகளைக் கவனிக்கும் அதேவேளையில், அலுவலர்களின் உயர்தொழில்சார் தேர்ச்சிகளின் அபிவிருத்திக்காக இக்கழகம் வழிவகுக்கின்றது.

iv. இத்திணைக்களத்தினுள்ளான எல்லாக் கணினிகளும் ஒரு வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் எல்லாப் பதவிநிலை அலுவலர்களுக்கும் ஏனைய தகவுடைய அலுவலர்களுக்கும் கணினிகளும் இணைய வசதியும் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய அலுவலர்களுக்கும் கணினிகளுக்கும் இணைய வசதிக்குமான அணுக்கம் வழங்கப்பட்டுள்ளது. புதிய தொழினுட்பவியலைப் பயன்படுத்துவதற்கு எல்லா அலுவலர்களுக்கும் வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் இத்திணைக்களம் e-ஆளுகைக் கொள்கையை அமுலாக்கியுள்ளது.

## மொழிபெயர்ப்புப் பிரிவு

மொழிபெயர்ப்புப் பிரிவானது, (புதிய சட்டவாக்கங்களினதும் திருத்தச் சட்டவாக்கங்களினதும்) சட்ட வரைதற் பிரிவினால் ஆங்கிலத்தில் வரையப்பட்ட எல்லா வரைவுச் சட்டமூலங்களையும் மற்றும் மீளாய்வு செய்யப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களையும் இயைபான மொழிகளில் மொழிபெயர்ப்பதற்குப் பொறுப்பாகவுள்ளது. தாபன, நிருவாக மற்றும் கணக்குப் பிரிவுகளினால் அனுப்பப்பட்ட அலுவலகமுறையான ஆவணங்களைத் தேவைப்பட்ட மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கும் இப்பிரிவு பொறுப்பாகவுள்ளது.

## வெளியீட்டுப் பிரிவு

வரைவுச் சட்டமூலங்களினதும் துணைநிலைச் சட்டவாக்கங்களினதும் ஆங்கில, சிங்கள, தமிழ் உரைகளை ஒப்புநோக்குவதற்கும் சரிபார்ப்பதற்கும், அரசாங்க அச்சகரினாலும் பாராளுமன்றத்தினாலும் அனுப்பிவைக்கப்பட்ட இயைபான ஒப்புநோக்கற் பிரதிகளையும் தாய்ப் பிரதிகளையும் வரைவுகளின் கையெழுத்துப் பிரதிகளுடன் வாசிப்பதற்கும் வெளியீட்டுப் பிரிவு பொறுப்பாகவுள்ளது. சட்ட அலுவலர்களின் மேற்பார்வையின் கீழ் அத்தகைய ஒப்புநோக்கற் பிரதிகள் பதிப்பிக்கப்படுமிடத்து அரசாங்க அச்சகருடனும் பாராளுமன்றத்துடனும் ஒருங்கிணைவதற்கும் அரசாங்க வர்த்தமானியில் சட்டமூலங்கள் வெளியிடப்படுதல் தொடர்பான கருமங்களைப் புரிவதற்கும் இப்பிரிவு பொறுப்பாகவுள்ளது.

# கணக்குப் பிரிவு

## 230, சட்டவரைஞர் திணைக்களம்

## 2015.01.01 – 2015.12.31 என்ற காலப்பகுதிக்கான செலவினம்

தலைப்பு : 230 – சட்டவரைஞர்

நிகழ்ச்சித்திட்டம் : 01 தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

கருத்திட்டம் : 01 பொது நிருவாகமும் சட்டவாக்கங்களை வரைதலும்

(அ) 2015.01.01 முதல் 2015.12.31 வரையிலான மீண்டுவருஞ் செலவினம்

| மீண்டுவருஞ் செலவினத்தின் விபரங்கள் | வரவுசெலவுத்திட்ட நிதி ஏற்பாடுகள் (ரூபா) | குறைநிரப்பு ஏற்பாடுகள் | நிதி ஒழுங்குவிதிகள் 66 மற்றும் 69 இன் படியான கைமாற்றல்கள் | தேறிய நிதி ஏற்பாடுகள் (ரூபா) | மொத்தச் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 42,800,000 | 14,600,000 | - | 57,400,000 | 55,147,736 |
| ஏனைய செலவினம் | 31,250,000 | - | (810,000) | 30,440,000 | 21,059,102 |
| மொத்த மீண்டுவருஞ் செலவினம் | **74,050,000** | **14,600,000** | **(810,000)** | **87,840,000** | **76,206,838** |

2015.01.01 முதல் 2015.12.31 வரையிலான மூலதனச் செலவினம்

| மூலதனச் செலவினத்தின் விபரங்கள் | வரவுசெலவுத் திட்ட நிதி ஏற்பாடுகள் (ரூபா) | நிதி ஒழுங்குவிதிகள் 66 மற்றும் 69 இன் படியான கைமாற்றல்கள் | தேறிய நிதி ஏற்பாடுகள் (ரூபா) | மொத்தச் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|
| **மூலதனச் சொத்துக்களை மறுசீரமைத்தலும் சீராக்குதலும்**<br>2001 – கட்டடமும் நிர்மாணங்களும் | 500,000 | | 500,000 | 367,628 |
| **மூலதனச் சொத்துக்களைக் கொள்ளுதல்**<br>2102 – தளபாடமும் அலுவலகச் சாதனங்களும் | 1,000,000 | 810,000 | 1,810,000 | 1,805,442 |
| **மனிதவள அபிவிருத்தி**<br>2401 - அலுவலகப் பணியாட்டொகுதி யினருக்குப் பயிற்சியளித்தல் (அ) | 7,500,000 | | 7,500,000 | 6,778,529 |

| | | | | |
|---|---|---|---|---|
| **<u>ஏனைய மூலதனச் செலவினம்</u>**<br><br>2502 - முதலீடுகள் - சட்டப் புத்தகங்களைக் கொள்வனவு செய்தல் | 1,000,000 | | 1,000,000 | 866,748 |
| **<u>இலங்கைச் சட்டவாக்கங்களை மீளாய்தல்</u>**<br><br>2502 – முதலீடு | 60,000,000 | | 60,000,000 | 2,102,258 |
| **மொத்த மூலதனச் செலவினம்** | **70,000,000** | **810,000** | **70,810,000** | **11,920,605** |

(ஆ) 2015.01.01 முதல் 2015.12.31 வரையிலான வருவாய் விபரங்கள்

| **விவரணம்** | **மதிப்பிடப்பட்ட வருவாய் (ரூபா)** | **வருவாய் (ரூபா)** |
|---|---|---|
| வட்டி - ஏனையவை | 380,000 | 421,430 |

(இ) முற்பணக் கணக்கு – 230011

(2015.01.01 – 2015.12.31)

| | **செலவினத்தின் ஆகக்கூடிய வரையறை (ரூபா)** | **பெறுகைகளின் ஆகக்குறைந்த வரையறை (ரூபா)** | **பற்றுமீதியின் ஆகக்கூடிய வரையறை (ரூபா)** |
|---|---|---|---|
| 2015 மதிப்பீடு | 4,000,000 | 1,500,000 | 19,000,000 |
| நி.ஒ.503(1) – 2015.12.31 அன்றுள்ளவாறான சீராக்குதல்களுக்கு முன்னர் | 1,622,836 | 2,347,862 | 9,909,427 |

**நிறுவனத்தின் செயல்நிறைவேற்றுகை பற்றிய சுருக்கம்**

சட்டவரைஞர் திணைக்களத்தின் பிரதான பணியானது பல்வேறு விடயங்கள் பற்றிய அரசாங்கக் கொள்கைகளை அரசியலமைப்புக்கு ஒத்ததாகவுள்ள சட்டவாக்கங்களாக உருமாற்றம் செய்வதாகும். இந்நடைமுறை, புதிய சட்டவாக்கங்களை வரைதல், ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துதல், சட்டவாக்கங்களை ஒன்றுதிரட்டுதல் மற்றும் இயைபான அமைச்சுக்களினால் ஆற்றுப்படுத்தப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களை மீளாய்வுசெய்தல் என்பவற்றைக் கொண்டுள்ளது. பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய வரைவுச் சட்டமூலங்களைப் பரிசீலனைசெய்வதற்குக் கூட்டப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுக்களின் கூட்டங்களில் பங்குபற்றுவதனையும், சட்டமூலங்கள் விவாதத்திற்கு எடுக்கப்படும் போது பாராளுமன்றத்துடன் ஒருங்கிணைவதனையும் உள்ளடக்குகின்ற குறித்த சில வேறு கடமைகளும் இத்திணைக்களத்திற்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளன. மேலும், துணைநிலைச் சட்டவாக்கங்களைத் தயாரித்தல் தொடர்பாக அமைச்சுக்களுக்கும், அரசாங்கத் திணைக்களங்களுக்கும் இத்திணைக்களம் சட்ட மதியுரையையும் வழங்குகின்றது.

அரசியலமைப்புக்கு இணங்கியொழுக, இலங்கையின் சட்டவாக்கங்களை அலுவலக முறையாக ஒன்றுதிரட்டுதலையும் மீளாய்வுசெய்தலையும் அவை சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுதலையும் இலக்காகக் கொண்ட 4 வருடக் கருத்திட்டத்திலும் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

'சட்டவரைதற் பிரிவின்'கீழ் குறித்துரைக்கப்பட்டவாறு 2015 ஆம் ஆண்டுக்கு இயைபான சட்டமூலங்களை வரைதல் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

නීති කෙටුම්පත් සම්පාදක දෙපාර්තමේන්තුව
අංක 80, අධිකරණ මාවත
කොළඹ 12.

சட்டவரைஞர் திணைக்களம்
இல.80, அதிகரண மாவத்தை
கொழும்பு 12.

තැ.පෙ. / த.பெ. / P.O.Box 554

LEGAL DRAFTSMAN'S DEPARTMENT,
N0.80, Adhikarana Mawatha,
Colombo 12.

*දුරකථන/தொலைபேசி/Telephones:2333394*

*විදුලි පණිවුඩ* :කෙටුම්පත්, කොළඹ.
*Telegrams* : DRAFTSMAN, Colombo
தந்திகள் :

*ෆැක්ස්/ பெக்ஸ்/Fax: 2325185, 2435935*  *மின்னஞ்சல் :*
*E –mail* : Idds1@sltnet.1k


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No. | LDD/Ac/06/06 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | JPA/B/LDD/02/2015/01 | දිනය<br>திகத<br>Date | 02.06.2016 |

உதவிக் கணக்காய்வாளர்,
கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களம்,
பத்தரமுல்லை.

ஒதுக்கீட்டுக் கணக்குகளைக் கணக்காய்வு செய்தல் - 2015
<u>தலைப்பு 230 – சட்டவரைஞர் திணைக்களம்</u>

மேற்கூறப்பட்ட இலக்கத்தின்கீழ் எனக்கு முகவரியிடப்பட்ட 2016.05.23 ஆந்தேதிய தங்களது கடிதம் தொடர்பாக. சொல்லப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்ட கருமங்கள் தொடர்பான அவதானிப்புகளும் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கையும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகின்றன:

2) <u>ஒதுக்கீட்டுக் கணக்கைத் தயாரித்தல்</u>

(i) 2015.12.09 ஆந்தேதிய BD/CBP/4/1/22-2015 ஆம் இலக்கத் தேசிய வரவுசெலவுத்திட்டச் சுற்றறிக்கையின் பந்தி 6.1.1 அமைச்சுக்களைப் பற்றிக் குறிப்பிடுவதனால், சொல்லப்பட்ட சுற்றறிக்கைக்குக் கவனம் ஈர்க்கப்படவில்லை.

மேலும், பல்லெண்ணிக்கையினவான நாட்களில் எத்தனிப்புகள் செய்யப்பட்டபோதிலுங்கூட, திறைசேரி அச்சுப்பாடுகளின் பிரதிகளைப் பெற இயலாமலிருந்துள்ளது.

பகிரங்கக் கணக்குகள் திணைக்களத்தின் அலுவலர்கள், சான்றுப்படுத்தப்பட்ட திறைசேரி அச்சுப்பாடுகளை வழங்குவதில் தாமதமிருக்குமெனக் கூறியுள்ளனர்; அத்துடன் இணையத்தின்மீதான தரவின் அடிப்படையில் இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும்படி

கணக்காளருக்குத் தொலைபேசிமூலம் அறிவிக்கப்பட்டது. அதற்கிணங்க, 2015 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கினது DGSA 2 மற்றும் DGSA 3 என்ற படிவங்கள், இணையத்தின்மீதான தரவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டன. 2015 ஆம் ஆண்டுக்கான கணக்குகளைத் தயாரித்தபின்னர் சான்றுப்படுத்தப்பட்ட திறைசேரி அச்சுப்பாடுகளைப் பெற இயன்றதாகவிருந்ததுடன், இணையத்தில் கிடைக்கக்கூடிய தரவிலிருந்து வித்தியாசப்படுகின்றமுறையில் அச்சுப்பாட்டில் தரவு பதியப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுக் கணக்கு இதற்கிடையில் தயாரிக்கப்பட்டிருந்தமையினாலும், கணக்கிலுள்ள தரவின் தேறிய பெறுபேறுகளில் வித்தியாசமெதுவும் இராதிருந்தமையினாலும், ஒதுக்கீட்டுக் கணக்கு திருத்தப்படவில்லை.

(ii) 2015.12.10 ஆந்தேதிய 245/2015 ஆம் இலக்கப் பகிரங்கக் கணக்குகள் சுற்றறிக்கைக்கிணங்க, 2015 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுக் கணக்கு குறிப்பு (i) நடப்புச் சொத்துக்களின் அசைவுசாரா அறிக்கை, இணையத்திலிருந்து நாம் இயைபான சுற்றறிக்கையை மீட்டெடுத்த நேரத்தில் தரப்பட்டிருந்த படிவத்தின்படி தயாரிக்கப்பட்டிருந்தது. பகிரங்கக் கணக்குகள் திணைக்களம் படிவங்களை மாற்றி அவற்றை எமக்கு மீண்டும் அஞ்சலிலிட்டபோதிலும், அவற்றை நாம் காணாமையினால், 2016.01.19 ஆந்தேதிய SA/MA/MA/C'CULAR இன் நியதிகளின்படி சொல்லப்பட்ட அறிக்கையைத் தயாரிக்க இயலாமலிருந்தது.

3) <u>இழப்பும் சேதங்களும்</u>

KM-0905 ஆம் இலக்க மோட்டார் காரின் தன்னியக்கத் திறப்பு 2015 நவம்பரில் தொலைந்துபோன போதிலும், 2015 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுக் கணக்கு தயாரிக்கப்பட்டதன்பின்னரே சொல்லப்பட்ட சேதம் முறையாக அறிவிக்கப்பட்டது. ஆகையால், DGSA 7 என்ற படிவத்தினுள் அதனை உள்ளடக்குவதற்கு இயலாமலிருந்தது.

3) <u>(i) வரவுசெலவுத்திட்டக் கட்டுப்பாடு</u>

| செலவினத் தலைப்பு | சேமிப்புகளின் நூற்றுவீதம் | நிதியேற்பாடுகளின் சேமிப்புக்கான காரணங்கள் |
|---|---|---|
| 1-1-1002 | 66 | மேலதிக நேரவேலை வரையறுக்கப்பட்டமை |
| 1-1-1101 | 37 | உள்நாட்டுப்பயணம் வரையறுக்கப்பட்டமை காரணமாக நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டன. |
| 1-1-1102 | 52 | ஸ்கொத்லாந்தில் நடைபெற்ற 2015 ஆம் ஆண்டின் CALC மாநாட்டுக்கும் CLC க்கும் செல்வதற்கு முன்னைய சட்டவரைஞருக்கு விசா வழங்கப்படாமையினால், நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டன. |

| | | |
|---|---|---|
| 1-1-1302 | 57 | எதிர்பார்க்கப்பட்டவாறு பேணுகைச் செலவு அதிகரிக்காமை. |
| 1-1-1402 | 05 | ஆகக்கூடிய எல்லைக்குக் குறைவாகத் திணைக்களத்தின் குறித்தசில அலுவலர்களினால் தொலைபேசி பயன்படுத்தப்பட்டமை. |
| 1-1-1403 | 30 | செலவுகளைக் கட்டுப்படுத்துதல். |
| 1-1-1404 | 80 | திணைக்களம் நீதியமைச்சுக்குக் குறித்தளிக்கப்பட்டதனால், வாடகைகளைச் செலுத்துவதற்கான அவசியமிருக்கவில்லை. |
| 1-1-1405 | 20 | எதிர்பார்க்கப்பட்டவாறு செலவுகள் உறப்படவில்லை. |
| 1-1-1506 | 32 | கடன் விண்ணப்பகாரர்கள் எவருமில்லை. |
| 1-1-2001 | 26 | எதிர்பார்க்கப்பட்டவாறு கட்டிடத் திருத்தங்களை நிறைவேற்றுவதற்கு அவசியமிருக்கவில்லை. |
| 1-1-2401 | 10 | உதவிச் சட்டவரைஞர்கள் இயைபான பயிற்சிக்காக விண்ணப்பித்த போதிலும், அவர்கள் தேவைப்படுத்தப்பட்ட குறைந்தபட்ச சேவைக்காலப்பகுதியைப் பூர்த்திசெய்யாதமையினால் அவர்கள் தெரிவுசெய்யப்படவில்லை. |
| 1-1-2502 | 13 | செய்யப்பட்ட கோரிக்கைகளுக்கான புத்தகங்கள் வழங்கப்படாமை. |
| 1-1-1-2502 | 96 | அரசாங்கத்தின் 100 நாள் செயற்றிட்டத்தினுள் இத்திணைக்களம் உள்ளடக்கப்பட்டதனாலும் கருத்திட்ட ஒருங்கிணைப்பு அலுவலர் பதவி விலகியமையினாலும் இயைபான இலக்கை எய்துவது சிரமமாகவிருந்தது. |

3) (ii) <u>சட்டவாக்கங்களை மீளாய்வு செய்தலும் ஒன்றுதிரட்டுதலும் - சட்டவரைஞர் திணைக்களம்</u>

<u>2010 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரையான நிதிசார் முன்னேற்றமும், அவதானிப்புகளும், முடிவுகளும்</u>

1. 2009 ஆம் ஆண்டளவில் அப்போதிரந்த நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்புகள் அமைச்சர், சட்டவாக்கங்களின் மீளாய்வுக்கான தேவையைச் சுட்டிக்காட்டியமையினால், சட்டவரைஞர் திணைக்களம் சொல்லப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தைத் தொடங்கியது.

2. அதன்பின்னர் 2010 ஆம் ஆண்டில் இயைபான கருத்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டில் நிதியமைச்சின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

3. கருத்திட்ட அறிக்கை அங்கீகரிக்கப்பட்ட பின்னர், தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம், அமைச்சரவையின் அங்கீகாரம் தாமதமின்றிப் பெறப்படுமென்ற எதிர்பார்ப்புடனும், இக்கருத்திட்டத்தின் அவசியத்தைக் கவனத்துட்கொண்டும் நிதியேற்பாடுகளைக் குறித்தொதுக்கியிருந்தது.

4. எவ்வாறாயினும், இயைபான அமைச்சரவை நிருபம் அதன்பின்னர் தயாரிக்கப்பட்டு அமைச்சரவை நிருபத்தைத் தயாரிக்கும்போது மதிப்பீட்டினால் குறித்தொதுக்கப்பட்ட நிதியேற்பாடுகள் ஒரு பிரச்சினையான நிலைமையை ஏற்படுத்தியது.

5. எவ்வாறாயினும், அத்தகைய பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தபின்னர், 2014 மார்ச்சு மாதத்தில் இயைபான அமைச்சரவை நிருபத்துக்கான அங்கீகாரம் பெறப்பட்டது.

6. அடுத்துப்பின்னர் திருமதி பீ.ஐ.எஸ்.சமரசிங்க, ச.ச., கருத்திட்டத்தை ஒருங்கிணைப்பதற்கு நியமிக்கப்பட்டதுடன், 2014.07.21 ஆந்தேதியிலிருந்து கருத்திட்ட வேலை தொடங்கப்பட்டு தொடர்ந்து நடாத்தப்படுகின்றது.

7. **அதற்கிணங்க, 2010 ஆம் ஆண்டிலிருந்து 2014.07.21 ஆந்தேதிவரை சட்டவாக்கங்களை மீளாய்வு செய்தலும் ஒன்றுதிரட்டுதலும் தொடர்பில் நிதிசார் செலவெதுவும் உறப்படவில்லையெனத் தங்களுக்கு மேலும் அறிவிக்க விரும்புகின்றேன்.**

8. கருத்திட்டத்தின் வேலைப்பகிர்வு 2014.09.01 ஆந்தேதியன்று ஆரம்பிக்கப்பட்டு 2015.01.08 ஆந்தேதிவரை வேலையானது வழமைபோல் தொடர்ந்து நடைபெற்றது. எவ்வாறாயினும், 2015.01.08 ஆந்தேதியன்று தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய அரசாங்கத்தின் 100 நாள் செயற்றிட்டத்துக்கிசைய இத்திணைக்களம் நிறைவேற்றுவதற்குப் பொறுப்பிக்கப்பட்ட அரசியலமைப்புக்கான 19 ஆவது மற்றும் 20 ஆவது திருத்தங்கள் உட்பட, ஒன்றுதிரட்டுதலையும் மீளாய்வையும் செய்து கொண்டிருந்த உதவிச் சட்டவரைஞரும் சிரேட்ட உதவிச் சட்டவரைஞரும் பல்லெண்ணிக்கையினவான சட்டவாக்கங்களைத் தயாரிப்பதில் பாரிய வேலைப்பளுவில் ஈடுபட்டுள்ளோராக வந்தமை காரணமாக, கருத்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை எய்தமுடியவில்லை. மேலும் 100 நாட் காலப்பகுதி முடிவுற்றபின்னருங்கூட இயைபான சட்டவாக்கங்களைத் துரிதமாகச்

செய்துமுடிக்கும்படி அரசாங்கம் அறிவுறுத்தியிருந்தது; ஆதலால், 2015 யூன் மாதத்தின் முடிவுவரை சட்ட அலுவலர்கள் அத்தகைய வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

9. கருத்திட்டத்தின் செயற்பாடுகள் 2015 யூலை மாதத்திலிருந்து தொடங்கப்பட்டு வழமைபோல் பேணப்பட்டனவென அறிவிக்க விரும்புகின்றேன். அதற்கிணங்க, தாமதித்த செயற்பாடுகளுடன் ஒரேநேரத்தில் அடுத்தபடியாக நடவடிக்கைத் திட்டத்துடன் சிங்கள, தமிழ், சட்டங்கள் தொடர்பிலான வேலையைத் தொடங்குவதற்கான ஒழுங்கேற்பாடுகள் செய்யப்பட்டன, ஆனால் கருத்திட்டத்தின் அலுவல்களை ஒருங்கிணைத்தவரான திருமதி பீ.ஐ.எஸ்.சமரசிங்க, ச.ச., கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் இலங்கைச் சட்டக் கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டதனால், சொல்லப்பட்ட அலுவலர் சட்டவாக்கங்களை மீளாய்வுசெய்தற் கருத்திட்டத்திலிருந்து விலகினார்.

10. மேற்கூறப்பட்ட காரணங்களுக்காக, எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை எய்தவோ கொடுப்பனவுகளைச் செய்யவோ இயலாதிருந்தது. ஆகையால் இதுகாலவரை பூர்த்திசெய்யப்பட்ட அளவினதான வேலைக்காக மட்டுமே கொடுப்பனவுகள் செய்யப்பட்டனவெனத் தங்களுக்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

**அவதானிப்புகளும் முடிவுகளும்**

2011 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டுவரை அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு இயலாமலிருந்தமை நிதியேற்பாடுகளிலான சேமிப்பை விளைவித்துள்ளதென்றும், அப்போது அதன்பின்னர், இத்திணைக்களத்தின் முதனிலைக் குறிக்கோளாகவுள்ள அரசாங்கக் கொள்கையைச் சட்டவாக்கங்களாக உருமாற்றுதலுக்கு முரணாகவுள்ள ஒரு விடயத்துக்கு முன்னுரிமை கொடுப்பதிலான சிரமமும் கருத்திட்டத்தின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கு அலுவலரொருவர் கிடைக்காமையும் இயைபான நிதியேற்பாட்டின் சேமிப்பை விளைவித்துள்ளதென்றும் அவதானிக்கப்பட்டது.

கருத்திட்டச் செயற்பாடுகள் வழமைபோல் தொடர்ந்து நடாத்தப்பட்டு வருகின்றனவென்றும், ஒருங்கிணைப்புக்கான அலுவலரொருவரின் நியமனத்துக்கான அமைச்சரவை நிருபம் தயாரிக்கப்பட்டு 2016.02.16 ஆந்தேதியன்று நீதியமைச்சுக்கு அனுப்பப்பட்டதென்றும், அங்கீகாரம் பெறப்பட்டதும் புதிய நடவடிக்கைத் திட்டத்துக்கிணங்கக் கருத்திட்டத்தின் செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதென்றும் தங்களுக்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

………………………………..

டீ.எஸ்.எச்.குமாரஜீவ

சட்டவரைஞர்

**திணைக்களத்தின் செயல்நிறைவேற்றுகையை மேம்படுத்துவதற்கு மிக்க அண்மையில் எடுக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வழிமுறைகள்**

(i) திணைக்களத்திலுள்ள எல்லாச் சட்ட அலுவலர்களுக்கும் பொறுப்பிக்கப்பட்ட வேலையை (இவ்வேலை, பாராளுமன்றச் சட்டங்களைத் தயாரித்தல் தொடர்பான சட்டமூலங்களையும் அத்தகைய சட்டங்களுக்கு உத்தேசிக்கப்பட்ட திருத்தங்களையும் வரைதல், மற்றும் தனிப்பட்ட உறுப்பினர் சட்டமூலங்களை மீளாய்வு செய்தல் மற்றும் வேறு இணைந்த வேலைகள் என்பவற்றைக் கொண்டுள்ளது) கிரமமான அடிப்படையில் பின்தொடரும்படியும் அத்தகைய வேலையை மும்மொழிகளிலும் பூர்த்தி செய்யும்படியும் அவர்களுக்குத் தொடர்ச்சியாக அறிவுறுத்துதல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

(ii) அனுபவம் பெற்ற சிரேட்ட சட்டவரைஞர்களின் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் வகையில், சட்டவாக்கங்களை வரைவதில் உதவிபெறுவதற்கென நான்கு ஆலோசகர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர்.

(iii) சட்டவாக்க வரைதல் தொடர்பான வேலையைத் துரிதப்படுத்துவதற்கெனச் சட்ட அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

(iv) சட்டமூலங்களையும் திருத்தச் சட்டவாக்கங்களையும் வரைதல் தொடர்பான மொழிபெயர்ப்புப் வேலையைக் கையாள்வதற்குத் தகைமைபெற்ற மொழிபெயர்ப்பாளர்களின் பற்றாக்குறையொன்றுள்ளது. தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் இல்லாமையினால் (சட்டவாக்க வரைதல் தொடர்பான மொழிபெயர்ப்பு வேலையில் பரிச்சயமுள்ள) அரச கரும மொழித் திணைக்களத்தின் தொழிலிலுள்ள அலுவலர்களின் சேவைகளை ஈடுபடுத்துவது அவசியமாக வந்துள்ளது.

(v) சட்டமூலங்களை வரைதல் தொடர்பான வேலையில் உதவுகின்ற ஆவணப்படுத்துகை உதவியாளர் மற்றும் பதிப்பாசிரியர் பதவிகள் தொடர்பான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

(vi) எல்லாச் சட்ட அலுவலர்களினதும் ஏனைய பணியாட்டொகுதி உறுப்பினர்களினதும் அறிவையும், மனநிலையையும், தேர்ச்சிகளையும் சீராக்குவதனை இலக்காகக்கொண்ட பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுவதற்கு அத்தகைய எல்லா அலுவலர்களுக்கும் போதிய வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

(vii) இத்திணைக்களத்தில் தாபிக்கப்பட்ட A தர நூலகம், சட்டம் என்ற விடயத்தின் மீது எழுதப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் புத்தகங்களைப் பயன்படுத்துவதற்கு அவசியமான வசதிகளைத் திணைக்கள அலுவலர்களுக்கு வழங்குகின்றது.

(viii) திணைக்களத்தின் எல்லாச் சட்ட அலுவலர்களும் ஏனைய பணியாட்டொகுதி உறுப்பினர்களும், அரசாங்க சேவையின் மதிப்பைப் பேணிக்காக்கும் வகையில் வேலை நேரங்களின் போது தமது அலுவலக முறையான கடமைகளைக் கவனிக்க வேண்டுமென்ற பயன்பட்டனவான தெளிவான அறிவுறுத்துதல்கள் அவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ளதுடன் சட்ட அலுவலர்களுட்பட்ட பணியாட்டொகுதி உறுப்பினர்கள் எல்லோரும் தமது கடமைகளை எடுத்துக்காட்டான முறையில் நிறைவேற்றுகின்றனரென்பதைக் குறிப்பிடவும் வேண்டும்.